Institute of Mental Health (மனநலக் கழகம்)

Buangkok Green Medical Park
10 Buangkok View
Singapore 539747

www.imh.com.sg

Jul ஜூலை 2022

மருத்துவ பதிவேடுகள்

உங்களுடைய மருத்துவ பதிவேடுகளை அணுகுவதற்கு சில உறுதிப்படுத்தப்பட்ட செயல்முறைகள் உள்ளன. அவை உங்கள் கவனிப்பில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், உங்கள் கவனிப்பின் தரத்தை கண்காணிப்பவர்கள் அல்லது மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள், மற்றும் கல்வியில் ஈடுபட்டுள்ளவர்கள் மட்டுமே மருத்துவ பதிவேடுகளை அணுக முடியும். இது சட்டம் அல்லது மருத்துவமனையால் அங்கீகரிக்கப்பட்ட அளவில் இருக்கும். உங்கள் மருத்துவ பதிவேடுகளின் நகலை மருத்துவமனை கொள்கைக்கேற்ப நீங்கள் இங்கு பெறலாம்.

மத சம்பந்தமான ஆலோசனைஅளித்தல்

உங்கள் உணர்ச்சி, சமூக, ஆன்மீக மற்றும் கலாச்சார தேவைகளை நாங்கள் மதிக்கிறோம். நீங்கள் எங்களுடன் தங்கியிருக்கும் சமயத்தில் ஆன்மீக ஆதரவு மற்றும் அணுகலுக்கு எங்களிடம் கேட்கலாம். நீங்கள் மருத்துவமனையில் இருக்கும் சமயத்தில் ஒரு மத ஆலோசகர் வருவதற்கோ மற்றும்/அல்லது உங்களுக்காக பிரார்த்திக்கவோ நீங்கள் ஏற்பாடு செய்வதை நாங்கள் வரவேற்கிறோம். மற்றவர்களுக்கு தொந்தரவாகவோ அல்லது தீங்காகவோ இல்லாமல் இருந்தால் மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

நிதி ஆலோசனை

உங்களுக்கு நிதி ஆலோசனை வழங்கப்படும் சேவைகள் அளிக்கப்படுவதற்கு முன்பாக, உங்கள் மருத்துவ செலவுகள் தொடர்பான நிதி உதவி திட்டங்கள் பற்றிய நிதி கலந்தாய்வு மற்றும் தகவல்கள் உங்களுக்குத் வழங்கப்படும். உங்களுக்கு நிதி உதவி தேவைப்பட்டால், நீங்கள் எங்கள் மருத்துவ சமூக சேவகர்களை அணுகலாம். உங்கள் செலவுப்பட்டியல் மற்றும் மருத்துவமனை கட்டணங்களின் துல்லியத்தன்மை குறித்து உங்களுக்கு கேள்விகள் இருக்குமானால், நீங்கள் எங்கள் வியாபார அலுவலக பிரதிநிதிகளை அணுகலாம்.

நீங்கள் மருத்துவ ரீதியாக தகுதி பெற்ற விடுவிப்புச் சான்றிதழ் அளிக்கப்பட்டவுடன் IMH ஐ விட்டு வெளியேற வேண்டும். நீங்கள் ஆறு நாட்கள் சலுகை காலத்திற்குள் அவ்வாறு செய்ய முடியவில்லை என்றால், அரசாங்க மானியம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும், மேலும் ஏழாவது நாளிலிருந்து நீங்கள் மானியமில்லாத விகிதத்தில் பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

தகவல்தருவது பற்றி

தற்போதைய நிலைமைகள், கடந்தகால நோய்கள், மருத்துவமனையில் சேர்க்கப்படுதல், உட்கொள்ளும் மருந்து மற்றும் பிற தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட உங்கள் உடல்நலம் குறித்த முழுமையான மற்றும் துல்லியமான தகவல்களை, நீங்கள் மற்றும்/அல்லது உங்கள் குடும்பத்தார் எங்களுக்குத் தர வேண்டும்.

பதிவு மற்றும் கட்டண செய்முறைகளைச் செயல்படுத்துவதற்காக, முழுமையான மற்றும் துல்லியமான தனிப்பட்ட விவரங்களை வழங்கவும் மற்றும் உங்கள் மெடிசேவ், மெடிஷீல்ட் போன்றவற்றை அணுக நீங்கள் ஒப்புதல் தரவேண்டும்.

மற்றவர்களுக்கான மரியாதை மற்றும் கரிசனை

நீங்கள் மற்ற நோயாளிகளின் அந்தரங்கத்தை மதிப்பதற்கும் மற்றும், நோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் தொடர்புடைய அனைத்து மருத்துவமனை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு கட்டுப்படவும் நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

IMH இல் உங்கள் அனுபவம் இனிமையானதாகவும், வசதியாகவும் இருக்க நாங்கள் கடும் முயற்சி செய்கிறோம். உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், எங்கள் ஊழியரை தயங்காமல் அணுகுங்கள். IMH இல் சேவைகள் குறித்து மேலும் தகவல்களுக்கு நீங்கள் எங்களைத் தொடர்பு கொள்ள:

பொது விசாரணைகள்: 6389 2000

முன்பதிவுக்கு அழைக்க: 6389 2200

தொலைப்பிரதி: 6385 1050

மின்னஞ்சல்: enquiry@imh.com.sg

நோயாளி மற்றும் குடும்ப உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

INSTITUTE of MENTAL HEALTH
National Healthcare Group

மேன்மை மற்றும் மரியாதை

IMH (மனநலக் கழகம்) ஒரு மனநல சேவைகள் வழங்கும் முனைப்பான மூன்றாம்நிலை மனநல மருத்துவமனை ஆகும். வயது, பாலினம், இனம், தேசியம், சமூக நிலை, உடல் அல்லது மன நோய் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் , உங்களுக்கு ஆதரவான, மரியாதைக்குரிய, பொருத்தமான மற்றும் செலவு குறைந்த மருத்துவ பராமரிப்பு உங்களுக்கு வழங்கப்படும்.

உங்கள் சிகிச்சைக் குழு

உங்களுக்கான பல்துறை சிகிச்சைக் குழுவில் மருத்துவர்கள், தாதிகள் மற்றும் தொடர்புடைய சுகாதார தொழில் முறையாளர்கள் அடங்கியிருப்பார்கள். உங்கள் கவனிப்பில்,மேற்பார்வையின் கீழ், பயிற்சியாளர்கள் பங்கேற்கக் கூடும். உங்கள் சிகிச்சைக் குழு பற்றி மேலும் அறிய, எங்கள் ஊழியர்களை அணுகுங்கள் அல்லது qsm@imh.com.sg அல்லது enquiry@imh.com.sg.-க்கு மின்னஞ்சல் செய்யுங்கள்.

தகவல் தெரிவிக்கப்பட இணக்கம்

சில சிகிச்சைகள் மற்றும் செய்முறைகளுக்கு உங்களிடம் இருந்து தகவல் தெரிவிக்கப்பட்ட இணக்கம் தேவைப்படுகிறது. மனநிலை தகுதிக் குறைபாடு காரணமாக உங்கள் கவனிப்பு குறித்து உங்களால் முடிவுகள் எடுக்க முடியாவிட்டால், உங்கள் சார்பாக முடிவுகளை எடுக்க சட்டப்பூர்வமாக அங்கீகாரம் பெற்ற உங்கள் பராமரிப்பாளரிடமிருந்து நாங்கள் இணக்கம் பெறலாம். உங்கள் சார்பாக முடிவுகள் எடுக்க சட்டப்பூர்வமாக யாரும் இல்லாதபோது மற்றும் உங்கள் கவனிப்பு குறித்து முடிவுகள் எடுக்கும் மனத்திறன் உங்களுக்கு இல்லாதபோது, உங்கள் பராமரிப்பாளர்களுடன் கலந்தாலோசித்து உங்கள் சிறந்த நலன்களுக்கான சிகிச்சையளிக்க உங்கள் மருத்துவர் உத்தரவிடலாம்.

நீங்கள் ஆய்வில் பங்கேற்க விரும்பினால், தகவல் தெரிவிக்கப்பட்ட இணக்கம் தேவைப்படும்.

பாதுகாப்பு மற்றும் அந்தரங்கம்/தனியுரிமை

உங்கள் சிகிச்சையின் போது, நீங்கள் மேன்மையுடன் சிகிச்சை அளிக்கப்படுவீர்கள் மற்றும் நீங்கள் எல்லா நேரங்களிலும் கண்ணியமாகவும், தனியுரிமையுடனும் நடத்தப்படுவீர்கள். மேலும், ஒரு பாதுகாப்பான சூழலில் நீங்கள் கவனிப்பு பெறுவீர்கள். வயது, இயலாமை மற்றும்/அல்லது உடல்நலக்குறைவு காரணமாக பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கு பொருத்தமான பாதுகாப்பையும் நாங்கள் அளிக்கிறோம்.

நீங்கள் தங்கும் போதும் அதற்குப் பிறகும்

நீங்கள் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு மொழியில், உங்கள் நிலை மற்றும் சிகிச்சை திட்டம் குறித்து உங்கள் பராமரிப்பு குழு விளக்கும்.

சட்டவிதிகளுக்கு உட்பட்டு மருத்துவ கவனிப்பு அல்லது பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ சேவையை நீங்கள் ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். அப்படிச் செய்யும் போது, உங்கள் முடிவினால் உண்டாகும் எந்தவொரு மருத்துவ விளைவுகளுக்கும் நீங்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறீர்கள்.

உங்கள் சிகிச்சை திட்டங்கள் குறித்து முடிவெடுப்பது உள்ளிட்டு உங்கள் சிகிச்சையில் நீங்கள் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும்.

வரையறுக்கப்பட்ட சிகிச்சை திட்டத்திற்கு இணங்க நடப்பதில் நீங்கள் எதிர் கொள்ளக் கூடிய ஏதேனும் சிரமங்கள் குறித்து மருத்துவமனைக்கு நீங்கள் தெரிவிக்கலாம்.

அனைத்து மருத்துவமனை ஊழியர்கள், மற்ற நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களை நீங்கள் பணிவன்புடனும் மற்றும் மரியாதையுடனும் நடத்த வேண்டும்.

நீங்கள் சட்டப்பூர்வ காவலில் இல்லாவிட்டால் உங்கள் மருத்துவரின் ஆலோசனையை எதிர்த்து மருத்துவமனையை விட்டு வெளியேற உங்களுக்கு உரிமை உண்டு, ஆனால், மனநலம் (பராமரிப்பு மற்றும் சிகிச்சை) சட்டம் (MHCTA), குற்றவியல் நடைமுறைக் குறியீடு (CPC) அல்லது தொற்று நோய் (IDA) சட்டத்தின் எல்லைக்குள் காவலில் வைக்கப்பட்டிருந்தாலோ, அல்லது மருத்துவமனையை விட்டு வெளியேறுவதற்கான உரிமையின் மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலோ, சிங்கப்பூரில் நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்தாலும் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் / அல்லது நடப்பில் உள்ள சட்டப்படி நீங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தால், உங்களுக்கு வெளியேற அனுமதி இல்லை. அதையும் மீறி நீங்கள் மருத்துவமனையை விட்டு வெளியேற முடிவு செய்தால், அதன் பின்னர் உங்கள் உடல்நலம் தொடர்பான எந்தவொரு மருத்துவ விளைவுகளுக்கும் மருத்துவமனை மற்றும் மருத்துவர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள்.

மருத்துவமனைக் கொள்கை அல்லது உங்கள் மருத்துவரின் கட்டுப்பாடுகள் வேறுவிதமாக இல்லாத போது, குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் மற்ற பார்வையாளர்களை நீங்கள் சந்திப்பதற்கும் மற்றும் பேசுவதற்கும் உங்களுக்கு உரிமை இருக்கிறது. சட்டப்படி அல்லது மற்ற விதத்தில் தேவைப்பட்டால் தவிர, பார்வையாளர்களை மறுப்பதற்கு உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உரிமை இருக்கிறது.

மருத்துவமனையில் உங்களது கவனிப்பு பாதிக்கப்படும் என்ற பயமில்லாமல், உங்கள் மருத்துவ நிலை குறித்து இரண்டாம் கருத்து கோரும் உரிமை (MHCTA அல்லது CPC கீழ் நீங்கள் காவலில் இருந்தால் தவிர) உங்களுக்கு இருக்கிறது.

நீங்கள் வெளியேறியதைத் தொடர்ந்து உங்கள் கவனிப்பு மற்றும் சிகிச்சைத் தேவைகளை நாங்கள் தொடர்ந்து கவனிப்போம்.

உங்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர் மற்றும் குடும்பத்தினருடன் மேம்படுத்தப்பட்ட பராமரிப்பு திட்டமிடல் (Advance Care Planning (ACP) பற்றி விவாதிக்க உங்களுக்கு உரிமை உண்டு. இது எதிர்காலத்தில் நீங்கள் உங்கள் முடிவெடுக்கும் மன திறனை இழந்தால் உங்கள் உடல்நலம் தொடர்பான விஷயங்களில் முடிவுகளை வழிநடத்த உதவும்.

மேம்படுத்தப்பட்ட பராமரிப்பு திட்டமிடல் (ACP) பற்றிய விவாதத்தில் நீடித்த அங்கீகாரம் பெற்ற நபர் (Legal Power of Attorney) மற்றும் / அல்லது மேம்பட்ட மருத்துவ உத்தரவு (Advanced Medical Directive) போன்ற அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.